# தமிழ்நாடு ஆளுநரின் சட்ட விரோதச் செயலுக்கு உச்சநீதிமன்றம் கடும் கண்டனம்!

# தமிழ் - ஆங்கில நாளேடுகள் தலையங்கங்கள் தீட்டிப் பாராட்டு!

### தமிழ்நாடு ஆளுநருக்கு எதிரான

## உச்சநீதிமன்றத் தீர்ப்பு - நாடு முழுவதும் தாக்கத்தை ஏற்படுத்தும்!

### ‘தி இந்து’ ஆங்கில நாளேட்டில் ‘சட்ட மைல்கல்’ என்ற தலைப்பில் வெளியான தலையங்கத்தில் ஆணித்தரம்!

**சென்னை, ஏப்.11–**

**தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிரான உச்சநீதிமன்றத் தீர்ப்பு நாடு முழுவதும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று ‘சட்ட மைல்கல்’ என்ற தலைப்பில் வெளியான ‘தி இந்து’ நாளேட்டின் தலையங்கத்தில் ஆணித்தரமாக குறிப்பிடப்பட்டுள்ளது.**

‘தி இந்து’ நாளேட்டின் தலையங்கம் வருமாறு:-



Legal milestone

Cooperative federalism must guide conduct of Governors

The Supreme Court's judgment on the conduct of Tamil Nadu Governor R.N. Ravi is set to have a far-reaching impact on Centre-State relations, underscoring as it does India's federal principles in what are undoubtedly fraught times. The verdict enhances the administrative autonomy of States, and regulates the functioning of constitutional offices, with implications for the entire country. In the case which concerns Mr. Ravi's handling of 10 Bills passed by the State Assembly, the Court has effectively changed how Governors carry out their constitutional responsibilities. The intervention comes at a time when tensions between Governors and governments in States ruled by parties other than the BJP have peaked, especially over issues such as the appointment of Vice-Chancellors (V-Cs) to

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவியின் நடத்தை குறித்த உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு, மத்திய-மாநில உறவுகளில் நீண்டகால தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, சந்தேகத்திற்கு இடமின்றி நெருக்கடியான காலங்களில் இந்தியாவின் கூட்டாட்சி கொள்கைகளைப் போலவே இதுவும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. இந்த தீர்ப்பு மாநிலங்களின் நிர்வாக சுயாட்சியை மேம்படுத்துகிறது.

மேலும் அரசியலமைப்பு அலுவலகங்களின் செயல்பாட்டை ஒழுங்குபடுத்துகிறது, இது முழு நாட்டிற்கும் தாக்கங்களை ஏற்படுத்துகிறது. மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட 10 மசோதாக்களை ரவி கையாள்வது தொடர்பான வழக்கில் , ஆளுநர்கள் தங்கள் அரசியலமைப்பு பொறுப்புகளை எவ்வாறு நிறைவேற்றுகிறார்கள் என்பதை நீதிமன்றம் திறம்பட மாற்றியுள்ளது.

பா.ஜ.க. அல்லாத பிற கட்சிகளால் ஆளப்படும் மாநிலங்களில் ஆளுநர்களுக்கும் அரசாங்கங்களுக்கும் இடையிலான பதற்றங்கள் உச்சத்தை எட்டியுள்ள நேரத்தில் குறிப்பாக ஆளுநர்கள் வேந்தராக பணியாற்றும் அரசு நடத்தும் பல்கலைக்கழகங்களுக்கு துணை வேந்தர்கள் (VCs) நியமனம் போன்ற பிரச்சினைகள் தொடர்பாக இந்த தலையீடு வருகிறது.

வழக்கின் மையத்தில் உள்ள மசோதாக்கள், ஆளுநர் துணைவேந்தர்களை நியமிப்பதற்கான அதிகாரமாக மாநில அரசாங்கத்துடன் மாற்ற முயன்றது தற்செயல் நிகழ்வு அல்ல. மாநில சட்டமன்றத்தால் மீண்டும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர், ஆளுநர் ரவி இந்த மசோதாக்களை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவுக்கு அனுப்பினார் .

தற்போது மசோதாக்கள் ஒப்புதல் பெற்றதாகக் கருதப்படுவதாக நீதிமன்றம் கூறியது . மசோதாக்களை குடியரசுத் தலைவருக்குப் பரிந்துரைத்த ஆளுநரின் நடவடிக்கை “நம்பிக்கையற்றது” என்றும், அவரது நடத்தை “தன்னிச்சையானது, தவறானது மற்றும் சட்டத்தில் பிழையானது” என்றும் அது விவரித்தது இது ஆளுநர் பதவியின் செயல்திறன் மதிப்பீட்டை ஒத்த மொழி.

சாதாரண சூழ்நிலைகளில், இது போன்ற கடுமையான கண்டனம், விசாரணைக்கு உட்பட்ட நபரின் ராஜினாமாவுக்கு வழிவகுத்திருக்கும். ஆனால் இவை சாதாரண சூழ்நிலைகள் அல்ல, மேலும் தமிழ்நாட்டில் ஆட்சியில் இருக்கும் தி.மு.க.வுக்கு விரோதமாக இருக்கும் பா.ஜ.க. தலைமையிலான ஒன்றிய அரசாங்கத்தால் அவருக்கு ஒதுக்கப்பட்ட அரசியல் ரீதியாக ஒருதலைப்பட்சமான பாத்திரத்தை ரவி நிச்சயமாக ஆற்றி வந்தார். இடையூறாக இருப்பதுதான் அதன் உத்தி.

இந்தத் தீர்ப்பின் முக்கியத்துவம், ஒரு குறிப்பிட்ட ஆளுநரின் மீதான கண்டனத்திற்கு அப்பாற்பட்டது. ஆளுநர்கள் மசோதாக்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான திட்டவட்டமான காலக்கெடுவை இது வகுக்கிறது. ஆளுநர்கள் இனிமேல் சட்டத்தை காலவரையின்றி தாமதப்படுத்தவோ அல்லது விருப்பப்படி அல்லது தண்டனையின்றி செயல்படவோ முடியாது என்பதை இது உறுதி செய்கிறது. பெரும்பாலும் குறைமதிப்பிற்கு உட்படுத்தப்படும் ஒரு அரசியலமைப்புக் கொள்கையை நீதிமன்றம் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

ராஜ்பவன்கள் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுடன் செயல்பட வேண்டும். தற்போது சட்டம் அமலில் உள்ள நிலையில், தமிழ்நாடு அரசுக்கு துணைவேந்தர்களை நியமிக்க அதிகாரம் உள்ளது, மேலும் 12 பல்கலைக்கழகங்களில் இந்த காலியிடங்களை நிரப்ப விரைவாகச் செயல்பட வேண்டும், மேலும் அவை கடந்த கால ஊழல் குற்றச்சாட்டுகளைக் கருத்தில் கொண்டு தகுதி, நேர்மை மற்றும் திறமையின் அடிப்படையில் உருவாக்கப்படுகின்றன.

இந்தத் தீர்ப்பு வெறும் சட்ட மைல்கல் மட்டுமல்ல; இது அரசியலமைப்பு ஒழுக்கம் மற்றும் கூட்டுறவு கூட்டாட்சிக்கான அழைப்பு, மேலும் ஆளுநர் பதவிக்கு கண்ணியத்தை மீட்டெடுப்பது, நீதிமன்றம் சுட்டிக்காட்டியபடி, மாநில அமைச்சரவையின் நண்பராகவும், தத்துவஞானியாகவும், வழிகாட்டியாகவும் செயல்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒன்றிய அரசின் மழுங்கிய கருவியாக அல்ல.

இவ்வாறு ‘தி இந்து’ ஆங்கில நாளேட்டின் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான

## தமிழ்நாடு போராடியது; தமிழ்நாடு வென்றது!

### ‘தினத்தந்தி’ நாளேட்டின் தலையங்கத்தில் புகழாரம்!

**சென்னை,ஏப்.11–**

**‘முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு போராடியது; தமிழ்நாடு வென்றது’ என்று ‘தினத்தந்தி’ நாளேடு எழுதியுள்ள தலையங்கத்தில் புகழாரம் சூட்டியுள்ளது.**

இதுகுறித்து ‘தினத்தந்தி’ நாளேடு எழுதியுள்ள தலையங்கம் வருமாறு:



தலையங்கம்

தினத் தந்தி

10.4.2025 (வியாழக்கிழமை)

தமிழ்நாடு போராடியது; தமிழ்நாடு வென்றது

ஒவ்வொரு மாநில சட்டசபைகளிலும் நிறைவேற்றப்படும் மசோதாக்களுக்கு அனுமதி அளிப்பது தொடர்பாக இந்திய அரசியலமைப்பு சட்டம் 200-வது பிரிவு கவர்னருக்கு வரையறைகளை வகுத்துள்ளது. அதன்படி ஒன்று, அந்த மசோதாவிற்கு கவர்னர் ஒப்புதல் அளிக்கவேண்டும். இரண்டாவது, அரசிடம் விளக்கம் கேட்டு மசோதாவை திருப்பியும் அனுப்பலாம். மூன்றாவதாக ஜனாதிபதியின் ஒப்புதலுக்கு அதை பரிந்துரைக்கலாம். அப்படி ஒருவேளை கவர்னர் ஒரு மசோதாவை திருப்பி அனுப்பினால், அது மீண்டும் சட்டசபையில் நிறைவேற்றப்படும்பட்சத்தில் கவர்னர் கண்டிப்பாக ஒப்புதல் கொடுத்தே தீரவேண்டும். இதையெல்லாம் தெளிவாக கூறிய அரசியலமைப்பு சட்டம் எத்தனை நாட்களுக்குள் மசோதாக்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற காலவரையறையை மட்டும் கூறாமல் விட்டு விட்டது.




சமீபத்தில் தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி, தமிழக அரசு 2-வது முறையாக நிறைவேற்றி அனுப்பிய பிறகும் அரசியலமைப்பு சட்டப்படி மசோதாக்களுக்கு ஒப்புதல் கொடுக்காமல் ஜனாதிபதியின் ஒப்புதலுக்கு அனுப்பிவிட்டார். அதனால் அந்த 10 மசோதாக்களும் எந்தவித முடிவும் எடுக்கப்படாமல் அந்தரத்தில் தொங்கியதால், 10 பல்கலைக்கழகங்களின் நிர்வாகங்களும் அப்படியே முடங்கி போய்விட்டது. தமிழ்நாட்டில் மொத்தம் 22 பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. அதில் 20 பல்கலைக்கழகங்களுக்கு கவர்னரும், தமிழ்நாடு தேசிய சட்டப்பல்கலைக்கழகத்திற்கு சென்னை ஐகோர்ட்டு தலைமை நீதிபதியும், தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின் பல்கலைக்கழகத்திற்கு முதல்-அமைச்சரும் வேந்தராக இருக்கிறார்கள்.

கவர்னரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்ட 10 மசோதாக்களில் 2 அ.தி.மு.க. ஆட்சியிலும், மீதமுள்ள 8 மசோதாக்களும் 2022 மற்றும் 2023-ம் ஆண்டு தி.மு.க. ஆட்சியிலும் நிறைவேற்றப்பட்டவை. இவற்றில் பெரும்பாலானவை, துணை வேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை தமிழக அரசுக்கு கொடுக்கும் மசோதாக்கள். இந்த மசோதாக்கள் அனைத்தும் கவர்னரால் திருப்பி அனுப்பப்பட்டு, சட்டசபையில் 2-வது முறையாக நிறைவேற்றப்பட்டவை ஆகும்.

அரசியல் சட்டப்படி இதற்கு ஒப்புதல் கொடுக்காமல் கவர்னர், ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்ததை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசு வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கில் நீதிபதி பார்திவாலா, ஆர்.மகாதேவன் அமர்வு விசாரணை செய்து தங்களது சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியுள்ளது. அரசியல் சட்டத்தில் கவர்னரின் அதிகாரத்தில் காலக்கெடு இல்லாத நிலையால், குழப்பம் இருந்த நிலையில் நல்ல வெளிச்சத்தை காட்டியுள்ளது. இந்த தீர்ப்பின்படி, சட்டசபையில் நிறைவேற்றப்படும் மசோதாக்களுக்கு 30 நாட்களுக்குள் கவர்னர் ஒப்புதல் தரவேண்டும். அதை ஏற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பும் பட்சத்தில், அதற்கான காரணங்களை விளக்கி 3 மாதங்களுக்குள் திருப்பி அனுப்பவேண்டும்.

அமைச்சரவையின் ஆலோசனையை மீறி ஜனாதிபதிக்கு அனுப்புவதாக இருந்தால், அதுவும் 3 மாதங்களுக்குள் அனுப்பப்படவேண்டும். அதற்கிடையில் அந்த மசோதாவை சட்டசபை மீண்டும் நிறைவேற்றி அனுப்பினால் ஒரு மாதத்திற்குள் கவர்னர் கண்டிப்பாக ஒப்புதல் அளித்தே தீரவேண்டும். கவர்னருக்கு சுய முடிவு எடுக்கும் அதிகாரம் கிடையாது. ஆக, இந்த சிறப்புமிக்க தீர்ப்பால் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் நல்ல வழி காட்டப்பட்டுள்ளது. சுப்ரீம் கோர்ட்டின் இந்த தீர்ப்பு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும், ஆளுங்கட்சியான தி.மு.க.விற்கும் கிடைத்த ஒரு மகத்தான வெற்றியாகும். ஏற்கனவே பா.ஜனதா மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் ஆளாத மாநிலங்களில் உள்ள கவர்னர்கள் இது போல மாநில அரசின் மசோதாக்களுக்கு போட்ட முட்டுக்கட்டை எல்லாம் இப்போது அகன்றுவிட்டது. மொத்தத்தில் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசு, போராடியது. தமிழக அரசு வென்றது மட்டுமல்லாமல் கூட்டாட்சி தத்துவத்திற்கு வலுவும் சேர்த்துவிட்டது.

இவ்வாறு அந்தத் தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

### மாநிலத்தை கன்ட்ரோலில் எடுக்கும்

## ஒன்றிய அரசுக்கு விழுந்த சம்மட்டி அடி!

### ‘தினகரன்’ நாளேடு தலையங்கம்!

**சென்னை,ஏப்.11–**

**“மாநிலத்தை கன்ட்ரோலில் எடுக்கும் ஒன்றிய அரசுக்கு விழுந்த சம்மட்டி அடி” என்று ‘தினகரன்’ நாளேடு தலையங்கம் தீட்டியுள்ளது.**

**இதுகுறித்து தினகரன் நாளேட்டின் தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:**



தினகரன்

ஏப்ரல் 10, 2025 வியாழக்கிழமை

மாற்றம் அவசியம்

‘ஆட்டுக்கு தாடியும், நாட்டுக்கு கவர்னர் பதவியும் தேவையில்லை’ என்றார் அண்ணா. அன்று அவர் சொன்னது, இன்றைய காலகட்டத்துக்கும் சரியாகப் பொருந்துகிறது. தேர்தல் என்கிற ஜனநாயக முறைப்படி தான் ஒரு அரசு கட்டமைக்கப்படுகிறது. கவர்னர் போல அதில் நியமனப்பதவிகள் எதுவும் இல்லை.

‘ஆட்டுக்கு தாடியும், நாட்டுக்கு கவர்னர் பதவியும் தேவையில்லை’ என்றார் அண்ணா. அன்று அவர் சொன்னது, இன்றைய காலகட்டத்துக்கும் சரியாகப் பொருந்துகிறது. தேர்தல் என்கிற ஜனநாயக முறைப்படி தான் ஒரு அரசு கட்டமைக்கப்படுகிறது. கவர்னர் போல அதில் நியமனப்பதவிகள் எதுவும் இல்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசு, அதன் பிரதிநிதிகள் ஒவ்வொருவரும் மக்கள் பிரச்னையை நன்கு உணர்ந்தவர்கள். அதனால்தான் சில மசோதாக்கள் மீதான தீர்மானம் அனைவராலும் ஒருமனதாக ஏற்கப்படுகிறது. உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள அதிரடி தீர்ப்பும் அதைத்தான் உணர்த்துகிறது.

இது மக்கள் முடிவு செய்யக்கூடிய ஒரு விஷயம். தங்களை தேர்ந்தெடுத்த மக்களுக்காகத்தான் சட்டப்பேரவையில் ஒவ்வொரு மக்கள் பிரதிநிதியும் குரல் கொடுக்கிறார். அதில், ஒரு சாமானியனின் உரிமைக்குரலும் அடங்கியிருக்கிறது. அப்படிப்பட்ட சட்டப்பேரவையின் மாண்பை குலைக்கும்விதத்தில்தான் ஒவ்வொரு முறையும் ஆளுநர் ஆர்.என்.ரவி செயல்பட்டு வந்தார். கடந்தாண்டு துவங்கிய சட்டப்பேரவை கூட்டத் தொடரில், அரசின் உரையை புறக்கணித்து, அவராகவே ஒரு உரை வாசித்தார். அப்போதே பலத்த எதிர்ப்புகளை பல்வேறு கட்சி எம்எல்ஏக்கள் மற்றும் கட்சித்தலைவர்கள் வெளிப்படுத்தினர்.

பங்கேற்கும் விழாக்களில் தமிழ்த்தாய் வாழ்த்தை புறக்கணிப்பது, எதிர்ப்பு வந்தால் அதில், ‘திராவிட நல் திருநாடும்’ வரியை புறக்கணித்து ஒலிக்க வைப்பது என ஆளுநர் ஆர்.என்.ரவியின் அட்ராசிட்டி கொஞ்சநஞ்சமல்ல. தமிழ்த்தாய் வாழ்த்து தமிழர்களின் உயிர் மூச்சு. ஒரு மாநிலத்தின் கவர்னர் எந்த மாநிலத்தை சேர்ந்தவராக இருக்கலாம். அதில் பிரச்னையில்லை. ஆனால், பதவி வகிக்கும் மாநிலத்தின் தாய்மொழியாம், உலகின் முதன்மை மொழியான தமிழையும், தமிழ்த்தாய் வாழ்த்தையும் புறக்கணிக்கும் ஆளுநரின் செயல்பாட்டுக்கு உலகமெங்கும் உள்ள தமிழர்களும் கண்டனம் தெரிவித்திருந்தனர்.

ஆளுநர் என்பவர் அரசியல் சார்ந்த நிலையை ஒருபோதும் எடுக்கக்கூடாது. எங்கு சென்றாலும் ஒன்றிய பாஜ அரசின் புகழ் பாடுவது, சமஸ்கிருதம், சனாதானத்தை தூக்கிப் பிடித்து பேசுவது என ஆர்எஸ்எஸ், பாஜவின் பிரசார பீரங்கியாகவே செயல்பட்டு வந்தது; தமிழ்நாடு என்பது தவறு. தமிழகம் என்பது தான் சரி என வகுப்பு எடுத்ததை எல்லாம் தமிழ்நாட்டு மக்களே ஏற்றுக் கொள்ளவில்லை. இதற்கு எல்லாம் மேலாக தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை கிடப்பில் போடுவது ஆளுநரின் வேலையல்ல.

அதை குடியரசு தலைவருக்கு அனுப்பியது சட்டவிரோதமானது என உச்சநீதிமன்றம் சாட்டையடி அடித்திருக்கிறது. இந்த உத்தரவின் மூலம் ஒரு மாநிலத்திற்கு தேவையான மசோதாக்களுக்கு அனுமதி அளிப்பதுதான் ஆளுநரின் வேலை என்பதையும் உணர்த்தியிருக்கிறது. இது ஆளுநர் மூலம் மாநிலத்தை கன்ட்ரோலில் எடுக்கும் ஒன்றிய அரசுக்கும் விழுந்த சம்மட்டி அடியாகவே பார்க்கப்படுகிறது. பாஜ ஆளாத மாநிலங்களுக்கும் ஒரு நல்வழிப்பாதையை நமது தமிழக அரசு போட்டுக் கொடுத்துள்ளது என்பது மிகையாகாது.

உச்சநீதிமன்றத் தீர்ப்பின் எதிரொலியாக ஆளுநரை மாற்ற வேண்டுமென தமிழ்நாடு முழுவதும் கோரிக்கை வலுத்துள்ளது. மாற்றப்படுவதற்கான வாய்ப்புகள் கண்டிப்பாக உண்டு என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. ஆனாலும், இனிமேலாவது வரக்கூடிய ஆளுநர்கள், மாநில அரசோடு இணைந்து செயல்படுவதே சிறந்தது. ஒன்றிய பாஜ அரசின் ஊதுகுழலாக இருக்கக் கூடாது. இந்த மாற்றத்தைத்தான் இனி வருபவர்களிடம் தமிழ்நாடு மக்களும் எதிர்பார்க்கின்றனர்.

இவ்வாறு ‘தினகரன்’ நாடேடு தமது தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

### வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பு!

## ஆளுநருக்கு உச்சநீதிமன்றம் உணர்த்திய தீர்ப்பு!

### ‘இந்து தமிழ் திசை’ நாளேடு தலையங்கம்!

**சென்னை,ஏப்.11–**

**“மாநில அரசின் நண்பராகவும், வழிகாட்டியாகவும் ஆளுநர் இருக்க வேண்டும் என்று இந்தத் தீர்ப்பின் மூலம் உச்சநீதிமன்றம் உணர்த்தியிருக்கிறது” என்று ‘இந்து தமிழ் திசை’ நாளேடு தலையங்கம் எழுதியுள்ளது.**

அதன் விவரம் வருமாறு:



இந்து தமிழ்

வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு!

தமிழ்நாடு அரசு கொண்டுவந்த 10 மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்காமல் குடியரசுத் தலைவருக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி பரிந்துரை செய்தது சட்டவிரோதம் என அறிவித்துள்ள உச்ச நீதிமன்றம், அந்த மசோதாக்களுக்குத் தன் தன்னுடைய சிறப்பு அதிகாரத்தின் கீழ் ஒப்புதல் அளித்து தீர்ப்பளித்திருக்கிறது. இந்தத் தீர்ப்பை, ‘வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு’ எனத் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டிருக்கிறார். தமிழ்நாட்டுக்கு மட்டுமல்லாமல், பிற மாநிலங்களுக்கும் வழிகாட்டும் முன்னோடித் தீர்ப்பாக இது அமைந்திருக்கிறது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடும் வகையில் ஆளுநர்கள் நடந்துகொள்வதாக காங்கிரஸ் காலத்திலிருந்தே புகார்கள் உண்டு, தமிழ்நாடு, குஜராத், பஞ்சாப் போன்ற மாநில அரசுகள் வெவ்வேறு காலக்கட்டங்களில் ஆளுநர்களின் செயல்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கின்றன. நீதிமன்றங்களையும் அணுகியிருக்கின்றன. பாஜக அல்லாத கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களில், ஆளுநர்கள் மூலம் மாநில அரசுகளுக்கு அழுத்தம் கொடுக்கப்படுவதாக அண்மைக்காலமாக விமர்சனங்கள் எழுந்திருக்கின்றன.

இத்தகைய சூழலில், தமிழ்நாடு அரசு கொண்டுவந்த தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டத்திருத்த மசோதா, சென்னைப் பல்கலைக்கழகச் சட்டத் திருத்த மசோதா உள்ளிட்ட 10 மசோதாக்களை ஆளுநர் ஆர்.என்.ரவி கிடப்பில் போட்டுவிட்டதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்தன. இதுதொடர்பாக உச்ச நீதிமன்றத்தைத் தமிழ்நாடு அரசு அணுகிய நிலையில், இந்த மசோதாக்களை ஆளுநர் திருப்பி அனுப்பினார். சட்டப்பேரவையில் அந்த மசோதாக்கள் மீண்டும் நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பப்பட்ட நிலையில், அவற்றுக்கு ஒப்புதல் அளிக்காமல் குடியரசுத் தலைவருக்குப் பரிந்துரை செய்தார்.

இதையடுத்து மீண்டும் தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தை அணுகியது. உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி, இவ்விஷயத்தில் சுமுகத் தீர்வை எட்ட ஆளுநரைச் சந்தித்துத் தமிழக அமைச்சர்கள் பேச்சுவார்த்தையும் நடத்தியிருக்கின்றனர். எனினும், பிரச்சினை முடிவுக்கு வரவில்லை. இதற்கிடையே, குடிமைப் பணித் தேர்வுக்காகத் தயாராகிவரும் இளைஞர்களிடம் பேசிய ஆளுநர் ஆர்.என்.ரவி, “ஆளுநர் ஒரு தீர்மானத்துக்கு ஒப்புதல் அளிக்காமல் நிலுவையில் வைத்திருந்தால் அது நிராகரிக்கப்பட்டதாகப் பொருள்” என்று பேசியது சர்ச்சையானது.

இந்நிலையில், நீதிபதிகள் ஜே.பி. பார்திவாலா, ஆர். மகாதேவன் அடங்கிய அமர்வு அந்த 10 மசோதாக்களும் சட்டமாகி அமலுக்கு வந்துவிட்டதாக அறிவித்திருக்கிறது; மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் வழங்க வேண்டியதற்கான கால வரையறையையும் சுட்டிக்காட்டியிருக்கிறது. மிக முக்கியமாக, மாநில அரசின் நண்பராகவும் நடுநிலையாளராகவும் வழிகாட்டியாகவும் ஆளுநர் இருக்க வேண்டும் என்றும் இந்தத் தீர்ப்பின் மூலம் உச்ச நீதிமன்றம் உணர்த்தியிருக்கிறது.

ஓர் அரசமைப்பு எவ்வளவு சிறந்ததாக இருந்தாலும் அதைச் செயல்படுத்துபவர்கள் நல்லவர்களாக இல்லாவிட்டால் அது மோசமானதாகவே இருக்கும் என்கிற அம்பேத்கரின் வார்த்தைகளை நீதிபதி பாதிவாலா மேற்கோள் காட்டியிருப்பது அரசமைப்புச் சட்ட விழுமியங்கள் மீதான நீதித் துறையின் அக்கறையை நிலைநாட்டுகிறது. அரசியல் வேறுபாடுகளைக் கடந்து தமிழ்நாட்டின் பெரும்பாலான அரசியல் கட்சிகள் இந்தத் தீர்ப்பை வரவேற்றிருப்பது இதன் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

இந்திய அரசமைப்புச் சட்டமானது, தேர்தல்கள் மூலம் ஜனநாயக ரீதியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்குத்தான் ஆட்சி நிர்வாகத்தில் அதிகாரத்தை வழங்குகிறது. எனவே, வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தத் தீர்ப்பின் மூலம் நாடு முழுவதும், மாநிலங்களின் உரிமைகளை வலியுறுத்தும் அரசியல் கட்சிகளும் இயக்கங்களும் ஊக்கமடைந்திருப்பதில் ஆச்சரியம் இல்லை. இதேபோன்ற வழக்கு ஒன்றில் இந்தத் தீர்ப்பைக் கேரள அரசு சுட்டிக்காட்டியிருப்பது ஓர் உதாரணம், இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்வது, தீர்ப்பை எதிர்கொள்ள அவசரச் சட்டம் கொண்டுவருவது என்பன போன்ற வாய்ப்புகள் மத்திய அரசுக்கு இருக்கின்றன.

எனினும், இந்தத் தீர்ப்பை ஓர் ஆக்கபூர்வமான ஆலோசனையாக ஏற்றுக்கொண்டு மாநில அரசுகளின் சுதந்திரமான செயல்பாட்டை உறுதிசெய்வதுதான் ஆரோக்கியமான அரசியலை உறுதிசெய்யும்!

இவ்வாறு ‘இந்து தமிழ் திசை’ தமது தலையங்கத்தில் கூறியுள்ளது.